செ.வெ.எண். 37 நாள்: 15.11.2021

**கிருஷ்ணகிரி நகராட்சி, புதிய பேருந்து நிலையத்திற்கு அருகே உள்ள சின்ன ஏரியில் வடக்கிழக்கு பருவமழைநீரால் ஏரி நிரம்பி வருகிறது. கசிவு நீர் சின்ன ஏரியின் கிழக்கு புறம் உள்ள வீட்டுமனைகள் மற்றும் சாலைகளில் தேங்கி நிற்பதை வெளியேற்றும் பணிகள் மற்றும் நீர்வரத்து கால்வாய்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

கிருஷ்ணகிரி நகராட்சி புதிய பேருந்து நிலையத்திற்கு அருகே உள்ள சின்ன ஏரி வடக்கிழக்கு பருவமழையால் நிரம்பி வருவதையடுத்து, உபரி நீர் மற்றும் கசிவு நீர் சின்ன ஏரியின் கிழக்கு புறம் உள்ள வீட்டுமனைகள் மற்றும் சாலைகளில் தேங்கி நிற்பதை வெளியேற்றும் பணி மற்றும் நீர்வரத்து கால்வாய்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வடகிழக்கு பருவமழை காரணமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு ஏரிகள் நிரம்பி வருகிறது. கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட சின்ன ஏரி சுமார் 10 ஏக்கர் பரப்பளவு கொண்டது. புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள சின்ன ஏரி நிரம்பி உள்ளதால், கசிவு நீர் வெளியேற்றும் பணிகள், கால்வாய்கள் தூர்வாரப்பட வேண்டிய இடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்து கசிவு நீர் வீட்டுமனைகளிலும், குடியிருப்பு பகுதிகளிலும் தேங்கி நிற்காத வகையில் ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் நீர் வெளியேற்றும் பணிகளை மேற்கொள்ள வருவாய் துறை, நகராட்சி அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி, வருவாய்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.**